**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 24th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு IDFC வங்கியில் துணை மேலாளராக பணியில் இருந்தேன். தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 06.07.2021ம் தேதி, மாலை சுமார் 04.30 மணியளவில் சாட்சி ஜெயக்குமார் வீட்டிற்கு அருகில் அ.சா.1ம், சாட்சி திலீப்பும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது, எதிரி அருள்முருகன் கெட்ட வார்த்தைகளால் அ.சா.1 ஐ பேசினார். அப்போது, எதிரிகள் சரஸ்வதி, லிங்கச்சாமி ஆகியோர்கள் வீட்டிலிருந்து வந்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கும், எதிரிகள் வீட்டிற்கும் சுமார் 10 அடி தூரம் இருக்கும். அவர்களும் அ.சா.1 ஐ கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். எதிரி அருள்முருகன் அ.சா.1 ஐ அரிவாளால் தலையை நோக்கி வெட்டினார். அதை அவர் இடது கையால் தடுத்ததில் அதில் அவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது. அவர் அருகில் இருந்த சாட்சி திலீப் தடுக்க முற்பட்டபோது,

அவரையும் அரிவாளால் எதிரி அருள்முருகன் வெட்ட அதை அவரது இடது கையால் தடுத்ததில் அதில் அவருக்கும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் சரஸ்வதியும், லிங்கசாமியும் அ.சா.1 ஐ போக விடாமல் தடுத்து பிடித்து கொண்டார்கள். அ.சா.1 மற்றும் நாங்களும் சத்தம் போட எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி விட்டு சென்றார்கள். காயம்பட்ட சாட்சிகள் சிகிச்சைக்காக முதலில் ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கும், மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கும், பின்னர் திருநெல்வேலி ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கும் சென்றார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.24 16:30:11 +0530